**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், காங்கயம்.**
**முன்னிலை : திருமதி.கே.எஸ்.மாலதி, பி.ஏ., பி.எல்.,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம்**

2025–ம் ஆண்டு நவம்பர் மாதம் 18 ஆம் நாள் செவ்வாய்க்கிழமை
திருவள்ளுவராண்டு 2056, ஸ்ரீவிசுவாவசு வருடம், கார்த்திகைத்திங்கள் 02 ம் நாள்

**இ.ம.எண். 3/2024**

**in**

**அ.வ.எண். 52/2022**

1. P.கீதா
2. S.சதீஸ்குமார் ... மனுதாரர்கள்/வாதிகள்

/எதிர்/

1. அன்னபூரணி
2. வட்டாட்சியர் அவர்கள், காங்கயம்
3. தமிழ்நாடு அரசுக்காக,
   மாவட்ட ஆட்சியர், திருப்பூர் ... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்
4. மைனர் கோகுல்
   மைனர் சார்பாக அவரது கார்டியன்
   தாயார் அன்னபூரணி

.... எதிர்மனுதாரர்/
தரப்பினராக சேர்க்கப்பட வேண்டியவர்

இம்மனு இந்நீதிமன்றத்தின் முன்பாக 03.11.2025 ம் தேதியன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.C.P.சுப்பிரமணியம், M.A., B.L., அவர்கள் ஆஜராகியும், 1 ம் எதிர்மனுதாரர்/1 ம் பிரதிவாதியை திறந்த நீதிமன்றத்தில் அழைத்தும்

முன்னிலையாகாததால் தோன்றாத்தரப்பினர் ஆக்கப்பட்டும், 2 மற்றும் 3 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த அரசு வழக்கறிஞர் திரு.V.முருகேசன், B.Com., B.L., அவர்கள் ஆஜராகியும், 4ம் எதிர்மனுதாரர்/தரப்பினராக சேர்க்க வேண்டிய நபர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர்/நீதிமன்ற பாதுகாவலர் Ms.ஜெயஸ்ரீ, M.Com., B.L., அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாதங்களையும், வழக்காவணங்களையும் பரிசீலனை செய்து, இதுநாள் வரை இந்நீதிமன்ற சீரான பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றத்தால் பகரப்படும்.

## உத்தரவு

மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் 4ம் எதிர்மனுதாரரை அசல் வழக்கில் 4ம் பிரதிவாதியாக கட்சி சேர்த்து இம்மனுவில் கண்டுள்ள விபரப்படி வழக்குரையை திருத்தம் செய்துகொள்ள அனுமதியளித்து உத்தரவிடக்கோரி உரிமையியல் விசாரணை நடைமுறைச் சட்டம் கட்டளை 6 விதி 17ன்படி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1. மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் சுருக்கம்:-**

i) அசல் வழக்கானது மனுதாரர்கள்/வாதிகளால் எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகள் மீது விளம்புகை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர்களின் தகப்பனார் லேட். சுந்தர மனோகரனுக்கு வாரிசு சான்று வழங்க உத்தரவிடக்கோரி அசல் வழக்கு தாக்கல் செய்து நிலுவையில் உள்ளது. மனுதாரர்கள் மேற்படி வழக்கில் மனுதாரர்களின் தகப்பனாருக்கும் அவரது 2ம் மனைவியான 1ம் எதிர்மனுதாரருக்கும் பிறந்த 4ம் எதிர்மனுதாரரை பிரதிவாதியாக கட்சி சேர்க்கக்கோரி மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்த

இ.ம.எண்.2/2023 இந்நீதிமன்றத்தால் கடந்த 08.11.2024ம் தேதியன்று அனுமதிக்கப்பட்டுள்ளது. அதன்படி 4ம் எதிர்மனுதாரரை அசல் வழக்கில் 4ம் பிரதிவாதியாக கட்சி சேர்க்க வேண்டியது அவசியமாக உள்ளது. எனவே 4ம் எதிர்மனுதாரரை அசல் வழக்கில் 4ம் பிரதிவாதியாக கட்சி சேர்த்து இம்மனுவில் கண்டுள்ள விபரப்படி வழக்குரையை திருத்தம் செய்துகொள்ள அனுமதியளித்து உத்தரவிட வேண்டும் என்பதே மனுதாரர்கள் தரப்பு மனுவின் சுருக்கமாகும்.

**2. 4ம் எதிர்மனுதாரர்/4ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கம்:–**

i) மனுதாரர்கள் மனு பொய், மோசடி, சட்டப்படியும் நியாயப்படியும் செல்லத்தக்கதல்ல. இந்த எதிர்மனுதாரர் இந்த எதிருரையில் வெளிப்படையாக ஒப்புக்கொண்ட சங்கதிகளை தவிர மனுவில் கண்டுள்ள மற்ற சங்கதிகளை மனுதாரர்களே கண்டிப்பாக நிரூபணம் செய்ய வேண்டியது.

ii) 4ம் எதிர்மனுதாரர் லேட். சுந்தரமனோகரனுக்கு வாரிசு ஆவார். மனுதாரர்கள்/வாதிகள் 4ம் எதிர்மனுதாரரை 4ம் பிரதிவாதியாக கட்சி சேர்க்கக்கோரி தாக்கல் செய்திருந்த இ.ம.எண்.2/2023 இந்நீதிமன்றத்தால் அனுமதிக்கப்பட்டுள்ளது. அசல் தாவா வாரிசு சான்று கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் மைனர் 4ம் எதிர்மனுதாரரை தரப்பினராக சேர்த்துக்கொள்வதில் ஆட்சேபனை இல்லை. எனவே மைனர் 4ம் எதிர்மனுதாரரின் நலனுக்கு விரோதமில்லாமல் மனுவில் தகுந்த உத்தரவு பிறப்பிக்க வேண்டும் என்பதே 4ம் எதிர்மனுதாரர் தரப்பு எதிருரையின் சுருக்கமாகும்.

3. இரு தரப்பும் கேட்கப்பட்டது. மனு, எதிருரை, இரு தரப்பு வாதங்கள் மற்றும் வழக்காவணங்கள் கவனமாக பரிசீலிக்கப்பட்டது, இரு தரப்பிலும் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை மற்றும் சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை. 2 மற்றும் 3 எதிர்மனுதாரர்கள் தரப்பில் இம்மனுவிற்கு எதிருரை இல்லை என்று மேற்குறிப்பு செய்யப்பட்டுள்ளது.

4. இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில், இம்மனு அனுமதிக்கத்தக்கதா ? இல்லையா? என்பதாகும்.

<u>5. தீர்வு:–</u>

மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் மனுதாரர்கள் மேற்படி வழக்கில் மனுதாரர்களின் தகப்பனாருக்கும் அவரது 2ம் மனைவியான 1ம் எதிர்மனுதாரருக்கும் பிறந்த 4ம் எதிர்மனுதாரரை பிரதிவாதியாக கட்சி சேர்க்கக்கோரி இ.ம.எண்.2/2023 இந்நீதிமன்றத்தால் கடந்த 08.11.2024ம் தேதியன்று அனுமதிக்கப்பட்டுள்ளது என்றும் எனவே 4ம் எதிர்மனுதாரரை அசல் வழக்கில் 4ம் பிரதிவாதியாக கட்சி சேர்த்து இம்மனுவில் கண்டுள்ள விபரப்படி வழக்குரையை திருத்தம் செய்துகொள்ள அனுமதியளித்து உத்தரவிட வேண்டும் என்றும் சொல்லப்பட்டு 4ம் எதிர்மனுதாரர் தரப்பில் 4ம் எதிர்மனுதாரர் லேட். சுந்தரமனோகரனுக்கு வாரிசு என்றும் மனுதாரர்கள்/வாதிகள் 4ம் எதிர்மனுதாரரை 4ம் பிரதிவாதியாக கட்சி சேர்க்கக்கோரி தாக்கல் செய்திருந்த இ.ம.எண்.2/2023 இந்நீதிமன்றத்தால் அனுமதிக்கப்பட்டுள்ளது என்றும் அசல் தாவா வாரிசு சான்று கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் மைனர் 4ம் எதிர்மனுதாரரை தரப்பினராக சேர்த்துக்கொள்வதில் ஆட்சேபனை இல்லை என்றும் சொல்லப்பட்டுள்ளது.

6. வழக்காவணங்களை பரிசீலிக்கும் போது அசல் வழக்கானது வாதிகள் மற்றும் 1ம் பிரதிவாதி மட்டுமே கடந்த 20.05.2021 தேதியில் இறந்துபோன சுப்பிரமணியம் மகன் சுந்தரமனோகரன் என்பவருக்கு வாரிசுகள் என்று விளம்புகை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கில் கடந்த 19.07.2022 அன்று 2, 3 பிரதிவாதிகள் தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 4ம் எதிர்மனுதாரரை அசல் வழக்கில் 4ம் பிரதிவாதியாக கட்சி சேர்க்க அனுமதிகோரி இ.ம.எண்.2/2023 மனுவானது தாக்கல் செய்யப்பட்டு கடந்த 08.11.2024 அன்று மேற்படி மனு அனுமதிக்கப்பட்டுள்ளது. பின்னிட்டு கடந்த 03.12.2024 அன்று மனுதாரர்கள் தரப்பில் 4ம் எதிர்மனுதாரரை 4ம் பிரதிவாதியாக கட்சி சேர்த்து அசல் வழக்குரையை திருத்தம் செய்ய அனுமதி கோரி இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

7. வழக்காவணங்களைப் பரிசீலிக்கும்போது மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த திருத்தல் மனுவில் அசல் வழக்குரையில் குறுந்தலைப்பில் 3ம் பிரதிவாதி பெயருக்கு அடுத்து 4ம் பிரதிவாதியாக மைனர் கோகுல் சார்பாக அவரது கார்டியனும் தாயாருமான அன்னபூரணி என்று சேர்த்து திருத்தம் செய்துகொள்ள வேண்டும் என்றும், வழக்குரை நெடுந்தலைப்பில் 3ம் பிரதிவாதி விலாசத்திற்கு அடுத்து 4ம் பிரதிவாதி முகவரி சேர்த்து திருத்தம் செய்துகொள்ள வேண்டும் என்றும் சொல்லப்பட்டுள்ளது.

8. வழக்காவணங்களை பரிசீலிக்கும்போது அசல் வழக்கானது வாதிகள் மற்றும் 1ம் பிரதிவாதி தான் இறந்துபோன சுந்தரமனோகரன் என்பவருக்கு வாரிசுகள் என்று விளம்புகை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில் மனுதாரர்கள் தரப்பில் அசல் வழக்கில் மனுதாரர்களின்

தகப்பனாருக்கும் அவரது 2ம் மனைவியான 1ம் எதிர்மனுதாரருக்கும் பிறந்த 4ம் எதிர்மனுதாரரை பிரதிவாதியாக கட்சி சேர்க்கக்கோரி மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்த இ.ம.எண்.2/2023 மனுவானது இந்நீதிமன்றத்தால் கடந்த 08.11.2024ம் தேதியன்று அனுமதிக்கப்பட்டுள்ளது என்பதாலும் 4ம் எதிர்மனுதாரரை அசல் வழக்கில் 4ம் பிரதிவாதியாக கட்சி சேர்க்க வேண்டியது அவசியம் என்று மனுதாரர்கள் தரப்பில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் இந்நீதிமன்றத்தால் ஏற்கும்படியாகவே உள்ளது.

9. 4ம் எதிர்மனுதாரர் தரப்பில் அசல் வழக்கானது வாரிசு சான்று கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் மைனர் 4ம் எதிர்மனுதாரரை தரப்பினராக சேர்த்துக்கொள்வதில் ஆட்சேபனை இல்லை சொல்லப்பட்டுள்ளதாலும், மேலே கண்ட பரிசீலனையின் அடிப்படையிலும் இம்மனுவில் கண்டுள்ள திருத்தங்கள் அசல் வழக்கின் அடிப்படை தன்மையை மாற்றும் வகையில் இல்லை என்பதாலும் மற்றும் புதிய வழக்கு மூலத்தை தோற்றுவிக்கும் வகையில் இல்லை என்பதாலும் இம்மனுவில் கண்டுள்ள மேற்படி திருத்தங்கள் அசல் வழக்கில் செய்யப்படும் பட்சத்தில் தான் வழக்கை மேற்கொண்டு நடத்த முடியும் என்று மனுதாரர்கள் தரப்பில் சொல்லியுள்ள சங்கதிகள் இந்நீதிமன்றத்தால் ஏற்கும்படியாக உள்ளதாலும், அசல் வழக்கில் மனுதாரர்கள் கோரும் திருத்தல் சங்கதிகளைப் பொறுத்து நிரூபணம் செய்யும் பொறுப்பு மனுதாரர்கள் வசமே உள்ளது என்பதாலும் வழக்கின் சாட்சிய விசாரணை இன்னும் துவங்கப்படவில்லை என்பதாலும், தரப்பினர்களுக்கிடையேயுள்ள பிரச்சனையை இறுதியாக தீர்க்கும் பொருட்டும் தங்களது தரப்பு வழக்கை நிரூபணம் செய்ய மனுதாரர்களுக்கு போதிய வாய்ப்பை வழங்க வேண்டியது நீதியின்பால் அவசியம் என்று இந்நீதிமன்றம் கருதுவதாலும், இம்மனுவை அனுமதிப்பதால்

எதிர்மனுதாரர்களுக்கு எவ்வித கஷ்ட நஷ்டமும் ஏற்படப்போவதில்லை என்பதாலும், மேலே கண்ட விவாதங்களின்படியும் இம்மனுவை அனுமதித்து உத்தரவிடுவதே நீதியின்பால் சிறந்தது என்று இந்நீதிமன்றம் தீர்மானித்து இம்மனுவை அனுமதித்து உத்தரவிடுகிறது.

**முடிவாக,**

இம்மனு அனுமதிக்கப்பட்டு உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்ட பின்னர், இன்று 2025–ம் ஆண்டு நவம்பர் மாதம் 18 ம் நாள் என்னால் அவையறிய பகரப்பட்டது.

K S MALATHI
Digitally signed by K S MALATHI
Date: 2025.11.18 18:31:29 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
காங்கயம்.

**மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்** : இல்லை

**எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்** : இல்லை

K S MALATHI
Digitally signed by K S MALATHI
Date: 2025.11.18 18:31:45 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
காங்கயம்.